# வேதாகமத்தின் பண்புகள்

*வேதாகமத்தின் சில பண்புகள் அதன் தெய்வீகத் தொடக்கத்தை குறிப்பிடத்தக்க வகையில் சுட்டிக்காட்டுகின்றது. இந்தப் பண்புகள் சுருக்கமாய்க் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆராய்வின் மூலம் அவைகள் அதிகத் தகுதியுடையவைகளாகின்றன.*

## பல்வகைத் தன்மையின் மத்தியில் அதன் ஒருமைப்பாடு

*அதிகமான பல்வகைத் தன்மையின் மத்தியில் வேதாகமமானது ஒருமைத் தன்மையுடையதாய் இருப்பது என்பது அதன் மிக முக்கியமான தன்மைகளில் ஒன்றாகும்: வேதாகமம் அறுபத்தியாறு பாகங்களைக் கொண்டு தொகுக்கப்பட்டதாக, அநேகமாக நாற்பது பேரால் - இவர்களில் பலர் ஒருவரையொருவர் அறியாதவர்கள் - மூன்று மொழிகளில், சுமார் ஆயிரத்து ஐந்நூறு வருடகாலத்தில் எழுதப்பட்டதாக உள்ளது. இந்த மனிதர்கள் வித்தியாசப்பட்ட இடங்களில், பல்வேறு அரசுகளின் கீழ் (அசீரியர், பாபிலோனியர், மேதியபெர்சியர், கிரேக்கர் மற்றும் ரோமர்) வாழ்ந்தார்கள்.*

*பல்வகைப்பட்ட இம்மனிதர்களின் எழுத்துக்கள் ஒன்றாக வைக்கப்பட்ட பொழுது, அவைகளில் ஒருமித்த தன்மையானது திகைப்பூட்டுவதாய் இருக்கின்றது. வேதாகமத்தின் ஆய்வுப் பொருள்கள், உண்மைகள் மற்றும் கொள்கைகள் ஆகியவை மாபெரும் சிந்தையொன்று அதன் எழுத்தாக்கத்தை ஒருங்கிணைத்தது என்பதைப் பிரதிபலிக்கின்றன. தனிச் சிறப்பான இந்த எழுத்தாக்கங்களின் தொகுப்பினுடைய ஒருமைப் பாட்டிற்கான எடுத்துக்காட்டுகளை நாம் காண்போம்.*

### இயேசு

*வேதவசனங்களின் முதன்மை ஒருமைப்பாடாக உள்ளவர் இயேசுவே ஆவார், ஏனெனில் இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது (வெளி. 19:10இ). இந்தக் கலிலேய மனிதர் பற்றியும், மனிதர்களுடன் அவருடைய உறவு பற்றியும் வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்திலும் ஏதாவதொன்று கூறப்பட்டுள்ளது. சகலத்தையும் தமது குமாரனுக்குள் கூட்டப்படச் செய்வது தேவனுக்குப் பிரியமானதாய்*

இருக்கின்றது (எபே. 1:10). இயேசுவைப் பற்றி யாரோ ஒருவர் பின்வருமாறு எழுதினார்:

> ஆதியாமத்தில் அவர் சமாதான கர்த்தர் (Shiloh) என்று தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்டதை நான் காண்கின்றேன். யாத்திராகமத்தில் அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியாகக் கூறப்பட்டார். லேவியராகமத்தில் போக்காடானார். சங்கீதங்களில் மேய்ப்பரானார். உன்னதப்பாட்டில், சாரோனின் ரோஜாவாக, பள்ளத்தாக்கின் லீலி புஷ்பமாக, பதினாயிரம் பேரிலும் சிறந்தவராக ஆனார். யோபுவில் அவர் மத்தியஸ்தரானார். ஏசாயாவில் துன்புறும் ஊழியக்காரர் ஆனார். தானியேலில் பரிசுத்தம் நிறைந்தவர் எனப்பட்டார். எரேமியாவில் கிளை என்று முன்னுரைக்கப்பட்டார். மத்தேயுவில் மேசியாவாகவும், மாற்குவில் அற்புதங்களைச் செய்யும் ஊழியக்காரராகவும் காட்டப்பட்டார். லூக்காவில் கிறிஸ்து என்னப்பட்டார். யோவானில் வார்த்தை என்று உரைக்கப்பட்டார். நடபடிகளில் ஜீவாதிபதி என்று கூறப்பட்டார். ரோமரில் விடுதலை தருபவர் எனப்பட்டார். 1 கொரிந்தியரில் தேவனுடைய ஞானம் என்னப்பட்டார். கொலோசெயரில் சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்னப்பட்டார். 1 பேதுருவில் பிரதான மேய்ப்பர் என்றுரைக்கப்பட்டார். வெளிப்படுத்தின விசேஷத்தில் அல்பாவும் ஒமேகாவும் என்று கூறப்பட்டார்.

### சீர்திருத்தத்தை ஆதரிக்கும் மதங்கள்

மனிதர்களிடத்தில் தேவனுடைய செயல் விஷயங்களில் சீர்திருத்தத்தை ஆதரிக்கும் மதங்கள் முன் வைப்பதில் உள்ள வளர்ச்சியானது வேதாகமத்தின் ஒருமைப்பாட்டிற்கு இன்னொரு எடுத்துக்காட்டாக உள்ளது: முதலாவது பிதாக்களின் யுகம், பிறகு யூதத்துவத்தின் யுகம் மற்றும் கடைசியாகக் கிறிஸ்தவத்தின் யுகம். இந்த மூன்று யுகங்களும் குடும்ப மார்க்கம், நாட்டு மார்க்கம் மற்றும் உலக மார்க்கம் ஆகியவைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டன. இந்த மார்க்க அமைப்புக்களின் தர்க்க ரீதியான மற்றும் சூழ்நிலை ரீதியான வளர்ச்சியானது வெளிப்படுத்தப்பட்ட மார்க்கத்தின் முழுமையான நோக்கத்தின் தெளிவான மற்றும் ஒன்றிணைந்த சித்தரிப்புக்களைத் தரும் வகையில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மாதிரிகளும் மாதிரியின் ஒப்பனையும்

மாதிரிகளும் மற்றும் மாதிரிகளின் ஒப்பனையானதும் பயன் பாடென்பது பரிசுத்த எழுத்துக்களில் காணப்படும் ஒருமைப்பாட்டின் மிக முக்கியமான எடுத்துக்காட்டு ஆகும். பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் புதிய ஏற்பாட்டின் பயன்பாடுகளைக் கொண்டிருந்தன. கனவில் கண்ட ஒரு ஏணியானது இயேசுவில் அதன் ஒப்பனையைக் கொண்டிருந்தது. மோசேயினால் கட்டப்பட்ட தூக்கிச் செல்லும் அமைப்பானது மனிதர்

கைகளினால் கட்டப்படாத ஆவிக்குரிய ஒரு கூடாரத்தைக் குறிப்பிட்டது. வானத்திலிருந்து பொழியப்பட்ட மன்னா என்ற சிறிய உணவானது இயேசுவைப் பிரதிநிதித்துவப் படுத்தியது. செங்கடலை அற்புதமாய்க் கடந்து சென்ற நிகழ்ச்சியானது புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தின் மாதிரியாய் இருந்தது (1 கொரி. 10:2ஐக் காணவும்). ஒரு மனைவி, அவளது அடிமைப் பெண் மற்றும் அவர்களின் மகன்கள் ஆகியோர் இரு மதங்களின் விளக்கத்திற்கான உருவகமாய் இருந்தார்கள் (கலா. 4:22-26). இராஜாவாயிருந்த ஒரு ஆசாரியர், ஆசாரியர் மற்றும் இராஜா ஆகிய பாகங்களைக் கொண்ட கிறிஸ்துவுக்கு நிழலாய் இருந்தார். மாதிரி மற்றும் ஒப்பனை, நிழல் மற்றும் பொருள் ஆகியவற்றின் ஒன்றிப்பானது, பழைய ஏற்பாடு ''புதிய ஏற்பாட்டைத் தனக்குள் மறைத்துள்ளது'' என்று அழைக்கப்படுதல், புதிய ஏற்பாடு, ''பழைய ஏற்பாட்டை வெளிப்படுத்துகிறது'' என்ற கண்ணோக்கமிடுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் அளவுக்கு மிகவும் நெருக்கமாய் உள்ளது.

### நிறைவு செய்யப்பட்ட வரலாறுகள்

வேதாகமத்தின் ஒரு பகுதியில் தொடங்கப்பட்ட எடுத்துரைப்புகள் ஒரு காலம் வரைக்கும் நிறைவற்றவைகளாக விடப்பட்டு, கடைசிப் புத்தகத்தில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. தெய்வீகப் பதிவேட்டின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட ஜீவவிருட்சத்தின் வரலாறானது வெளிப் படுத்தின விசேஷத்தில் யோவானால் முடிக்கப்படுகின்றது. ஆதித்தாயுடன் தொடங்கிய வேதனை மற்றும் கண்ணீரின் வரலாறு கண்ணீரைத் துடைப்பதென்பதால் உச்சக்காட்சியை அடைகின்றது. முதல் பாவத்துடன் தொடங்கிய சாபங்களின் வரலாறானது ''இனி ஒரு சாபமுமிராது'' (வெளி. 22:3) என்ற தெய்வீக உறுதி வாக்குடன் முடித்து வைக்கப் படுகின்றது. ஆதாமும் ஏவாளும் ஏதேனில் இருந்து வெளியேற்றப்பட்ட உடன் தொடங்கிய பலி செலுத்துதலின் வரலாறானது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி போல் (வெளி. 5:6) காணப்பட்டவராகிய யூத கோத்திரத்துச் சிங்கத்தின் வரலாற்றுடன் வெளிப்படுத்தின விசேஷத்தில் மெய் சிலிர்க்கும் உச்சக்காட்சிக்குக் கொண்டு வரப்பட்டது.

### ஒப்பீடுகள்

விவரிக்கப்பட்டுள்ள ஒருமைப்பாடானது மிக அதிகமான வகைகளையுடைய எழுத்தாளர்கள் மற்றும் சூழ்நிலைகளிலிருந்து வருகின்றதென்பது இன்னும் அதிகமாகக் கவனிக்கத் தக்கதாகின்றது. ஒப்பிட்டு நோக்குகையில் இது இன்னும் மிக அதிகமாகக் கவனிக்கத் தக்கதாகின்றது. பல்வேறு எழுத்தாளர்கள், மூன்று மொழிகளில், பதினைந்து நூற்றாண்டுகளில் எழுதிய புத்தகங்களின் தொகுதி இன்னொன்றை எவரேனும் தேர்ந்தெடுத்தால், அதில் தொடர்புடைய சிந்தனை ஏதேனும் காணப்படுகையில் அவர் மிகவும் திகைப்படைவார். பழங்காலக் கிரேக்க எழுத்தாக்கங்கள் யாவும் ஒரு தொகுதியாக வைக்கப்பட்டால் கூட

*அவைகள் யாவும் கிரேக்க எழுத்தாளர்களால் எழுதப்பட்டது என்ற ஒருமைப்பாடு ஒன்று மட்டுமே அவைகளில் இருக்கும்.*

*மதத்தின் மற்ற புத்தகங்களுடன் வேதாகமத்தை ஒப்பிடும்போது, அந்த ஒப்பிடுதலானது பல்வகைத் தன்மையின் மத்தியில் வேதாகமத்தில் காணப்படும் வலுமிக்க ஒருமைப்பாட்டை வலியுறுத்த மட்டுமே பயன்படுகின்றது. வேதாகமம் அல்லாத மதப் புத்தகங்களில் சிறிய அளவில் மட்டுமே ஒருமைப்பாட்டைக் கண்டறிய முடியும். முகமதியர்கள், ஜொராஸ்டிரியர்கள் மற்றும் புத்த மதத்தவர்கள் ஆகியோரின் நிரூபணமற்ற பரிசுத்த எழுத்துக்களில் ''ஒருமைப்பாடு இல்லை. அவைகள் பல்வகைப்பட்டவைகளின் குவியலாக, ஒழுங்கு, வளர்ச்சி அல்லது திட்டம் ஆகியவைகளை ... முன்வைக்காதவைகளாக உள்ளன''* (James Orr, ed., “Bible,” in *The International Standard Bible Encyclopedia*).

*நாற்பது சிற்பிகள் (அவர்களில் பலர் ஒருவரையொருவர் அறியாதவர்கள்) எவ்வித முன் திட்டமும் இன்றி ஒரு சிலையின் பாகங்களைச் செதுக்கி, மகிழ்வான விளைவுகளை ஏற்படுத்துவதென்பது முடியாத செயல் ஆகும். அது போலவே, ஒரு மேலான ஒருங்கிணைப்பாளர் இன்றி, நாற்பது ஓவியர்கள் சேர்ந்து, தலை சிறந்த படைப்பென்று கருதப்படக் கூடிய ஒரு ஓவியத்தின் பாகங்களை உண்டாக்குவதும் முடியாத செயல் ஆகும். புதிர்க் கட்டங்களின் பாகங்கள் அவ்வெட்டுக்களை ஒருவர் மேற்பார்வையிடாதிருந்தால் ஒன்றுடன் ஒன்று பொருந்த மாட்டாது. சாலொமோனின் நாட்களில், சுத்தியல், கோடாரி அல்லது வேறு எந்த ஒரு இரும்பு ஆயுதங்களின் ஒலியுமின்றி வசீகரமான ஆலயமாக இணைக்கப்பட்ட கற்கள் யாவும் முன் திட்டமிட்ட குறிப்புகளின்படி செதுக்கப்பட வேண்டியதாய் இருந்தது (1 இரா. 6:7). இசைவுகளின் தலை சிறந்த படைப்பென்று அழைக்கப்படும் வேதாகமத்தின் செயல் விளைவுக்கு மேற்பார்வையாளர் அவசியம் என்பதை இந்த ஒப்பீடுகள் வலியுறுத்துகின்றன. பல்வகைக் கலைஞர்களால் உண்டாக்கப்படும் இசைப்படைப்பொன்றுக்கு திட்டமிடுதலும் எல்லாவற்றையும் மேற்பார்வையிடுதலும் அவசியமாகின்றது, மற்றும் வேதாகமத்தின் இசைவான ஒன்றிப்புக்கும் இது அவசியமாகின்றது.*

## இதன் எளிமையும் ஆழமும்

*வேதாகமத்தின் ஆச்சரியமான எளிமையும் அத்துடன் இணைந்த அதன் ஆழமான அர்த்தங்களும் இது மனிதனை விட மேலான ஒருவரிடத்திலிருந்து தொடக்கம் பெற்றது என்பதைச் சுட்டிக்காட்டும் இரண்டாவது பண்பாகும். யோசேப்பு, தானியேல் மற்றும் இயேசு ஆகியோரின் வேதாகம வரலாறுகள் பளிச்சென்று தெளிவானவைகளாய் இருக்கின்றன. மறுபடியும் மறுபடியும் வாசிக்கப்படுகையில் இவைகள் இளைஞர் மற்றும் பக்குவப்பட்டவர்களின் கவனத்தை இறுகப் பற்றிக் கொள்ளுகின்றன. அதே வேளையில், வேதாகமத்தின் கூற்றுக்கள் மனித மனங்களின் சிறந்த பகுதிகளில் மறுபடி மறுபடி கலந்துரையாடலில்*

ஈடுபடுகின்றன. காரண அறிவின்றி புரிந்து கொள்ளக் கூடாத அளவுக்கு இரட்சிப்பின் திட்டம் மிகவும் எளிமையாய் உள்ளது (ஏசா. 35:8; எபே. 5:17); இருப்பினும் எதிர்காலத்தில் உள்ளவைகள் பற்றிய யோவானின் தரிசனங்களை எந்த ஒரு மனிதரும் முழுமையாய்ப் புரிந்து கொள்ள முடியாது. அதன் அறிவு என்ற ஐசுவரியங்களின் ஆழத்தைக் கண்டறிய முடியாது (ரோமர் 11:33). யூதர்/புறஜாதியார் இடைச் செயலானது ஒலிவமரத்தில் கிளை ஒட்ட வைக்கப்படுதலாகச் சித்தரிக்கப் பட்டதென்பது மனித மனங்களின் சிறந்த பகுதிகளால் மறுபடி மறுபடி ஆராய்ச்சி செய்யும்படி தூண்டுவதாய் உள்ளது (ரோமர் 11:16-24).

இது முறைப் படுத்தப்படாத ஒரு புத்தகமாகவும், இதன் பிரமாணங்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட சட்டங்களாய் அமைக்கப்படாததாகவும் இருக்கின்றது; இருப்பினும் தேவ பக்தி, நற்பண்பு, சரியான தன்மை மற்றும் இரக்கம் ஆகியவற்றினால் இது மனிதருடைய இருதயங்களில் ஏற்படுத்தும் செயல் விளைவு தவறற்றதாயிருக்கின்றது. குறிப்பிட்ட கடமைகள் பலவற்றை இது கட்டளையிட்டாலும், தேவன் மற்றும் மனிதர்மேல் அன்புகூருதல் என்ற மாபெரும் கொள்கையின் மீதே இது கவனம் செலுத்துகின்றது. குழந்தையினாலும், முற்பிதாவினாலும் ஒரு புத்தகம் மதிக்கப்பட முடியும் என்ற உண்மையே இந்தப் புத்தகம் மனிதருக்கு மேல் உயர்வான ஒரு தொடக்கத்தைக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## இதன் பாரபட்சமற்ற தன்மை

வேதாகமம் தெய்வீக எழுத்தாளரைக் கொண்டது என்பதற்கு, இதன் முக்கிய பாத்திரங்களைப் பற்றிய நடுநிலை தவறாத விவரிப்பானது மூன்றாவது ஆதாரமாக உள்ளது. மனிதர்களின் வரலாற்றை எழுதுபவர்கள் பொதுவாகத் தங்கள் நாயகர்களைப் புகழ்ந்து கூறி, அவர்களின் தவறுகளை குறைத்துக் கூறுவார்கள் அல்லது அவர்களின் பண்புக் குறைவுகளை மிகைப் படுத்தி, தங்கள் பாடக் கருத்துக்களைத் தவறாக உருவப்படுத்துவார்கள். ஆயினும், வேதாகமத்தில் பாராட்டுகளோ அல்லது கண்டனங்களோ குறைவாகவே உள்ளன. விவாதிக்கப்படுபவருடைய தகுதி அல்லது தகுதியின்மையை இதன் வாசகரே வழக்கமாக மதிப்பிடுகின்றார்.

பொதுவான வழக்கத்திலிருந்து நீக்கப்பட்ட வழிமுறையில், வேதாகமம் நோவாவின் பாராட்டத் தக்க குணங்களை எடுத்துரைத்து பின்பு அவர் மதுபானம் பண்ணியதையும் விவரிக்கின்றது. தலைசிறந்த செய்தி நிருபர்கள் போல, வேதாகமம் தாவீதின் உன்னதப் பண்புகளையும் அவருடைய பாவங்களையும் எடுத்துரைக்கின்றது. வேதவசனங்கள் ஆபிரகாமின் ஆழமான விசுவாசத்தை விவரிக்கின்றன, ஆனாலும் அவர் பார்வோனிடத்தில் பொய்யுரைத்ததையும் அவை மறைப்பதில்லை. சுவிசேஷ எழுத்தாளர்கள் பேதுருவினிடத்தில் பலத்த (நட்பு) உணர்வுள்ளவர்களாய் இருந்திருக்க வேண்டும், ஆனாலும் கிறிஸ்துவிடம் அவர் கொண்டிருந்த பயபக்தியையும், அவர் (பேதுரு) அவரை

*(கிறிஸ்துவை) மறுதலித்தது பற்றியும் கரையற்ற உண்மைகளை அவர்கள் அறிக்கையாய்க் கொடுத்தார்கள். யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் தனிப்பட்ட பேராவலானது, அவர்கள் கிறிஸ்துவுக்கென்று ஒப்புக் கொடுத்து வாழ்ந்ததை விவரித்தது போலவே விரிவாக விவரிக்கப்படுகின்றது.*

*வேதாகம எழுத்தாளர்கள், எவரொருவரின் விருப்பத்தையும் பூர்த்தி செய்வதற்காக எழுதவில்லை, அவர்கள் பாரபட்சம் காட்டுதலுக்கு உட்பட்டவர்களாயிருந்தும் கூட, பட்சபாதம் எதுவும் இல்லாதவர் களாகவே எழுதினார்கள். தனிமனிதரைச் சுட்டிக்காட்டாத அவர்களுடைய திறமையானது மற்ற மனித வரலாற்றாளர்கள் எல்லாருக்கும் அப்பாற்பட்ட வட்டாரத்தில் அவர்களை வைத்ததோடு, அவர்கள் பெற்றிருந்த தெய்வீக வழி நடத்துதலையும் சுட்டிக்காட்டுகின்றது.*

## இதன் செறிவுப் பண்பு

*வேதாகமம் தெய்வீக எழுத்தாளரைக் கொண்டது என்பதைச் சுட்டிக்காட்டும் அதன் இன்னொரு தனிப் பண்பு அதன் சுருக்கத் தன்மையாகும். முற்றிலுமாக மனுஷீகமான எழுத்தாளர்கள் செறிவைத் தேடும் செயலில் தொடர்ந்து போராடுகின்றார்கள். இந்தப் பகுதியில் பரிசுத்த எழுத்தாளர்கள் பரந்த அளவில் மதிப்பை அடைந்துள்ளார்கள். அகிலத்தின் படைப்பானது முப்பத்து நான்கு வசனங்களிலேயே - பந்து விளையாட்டைப் பற்றிய பத்திரிக்கைச் செய்தியின் சராசரிக் கட்டுரையொன்றில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளின் எண்ணிக்கையை விடக் குறைந்த வார்த்தைகளில் - விரிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. குறைந்தது இருபத்தைந்து நூற்றாண்டுகளின் மனித வரலாறானது ஆதியாகமம் என்ற ஒரே புத்தகத்தில் ஐம்பது அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.*

*இயேசுவின் ஞானஸ்நானம் பற்றிய விபரத்திற்கு ஐந்து வசனங்களே தேவைப்பட்டன, மற்றும் அவர் கடலை அமர்த்தியதைக் கூறுவதற்கும் ஐந்து வசனங்களே தேவைப்பட்டன. மறுரூபமாகுதல் எட்டு வசனங்களில் விவரிக்கப்படுகின்றது, மற்றும் இயேசுவின் மரணமானது இரண்டே அதிகாரங்களில் கூறி முடிக்கப்பட்டது. ஆயிரத்து இருநூறு நாட்களில் இயேசு செய்த ஊழியமானது முப்பத்தி நான்கு நாட்களின் நிகழ்ச்சிகளாகச் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. ஸ்தேவான் ஒரு அத்தியாயத்துப் பிரசங்கமொன்றில் சுமார் இரண்டாயிரம் வருடங்களின் வரலாற்றை எடுத்துரைத்தார். முதல் முதலாய் மரித்த அப்போஸ்தலர் ஒருவரின் மரண விபரமானது KJVயில் பதினோறு வார்த்தைகளில் மாத்திரம் (தமிழில் ஆறு வார்த்தைகளில் மாத்திரம்) பதிவு செய்யப்பட்டுள்ளது (அப். 12:2).*

*இப்படிப்பட்ட எடுத்துரைப்புக்களில் விரிவாய்க் கூறுதலும், வார்த்தைகளை அதிகப்படுத்துவதுமே மனித விருப்பமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதில் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதும், சில சொற்களால் மட்டுமே*

எடுத்துரைப்பதும் மிகவும் கடினமாகும். ஒரு சில வார்த்தைகளில் வேத வசனத்தை எழுதுவதற்கான அறைகூவலும், அதே வேளையில் அதன் அர்த்தத்தைத் தக்க வைத்துக் கொள்ளுதல் என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுவதாயில்லை. பாடக் கருத்தை அழித்து விடாமல் சுருக்கிக் கூறுவதில் வேதாகம எழுத்தாளர்களின் வெற்றியானது மனிதரைக் காட்டிலும் உயர்வான உதவியைச் சுட்டிக்காட்டுகின்றது.

## இதன் கட்டுப்படுத்தும் பண்பு

வேதாகம எழுத்தாளர்கள் (தங்கள் உணர்வுகளைக்) கட்டுப்படுத்திய பண்பானது மனிதர்களை வியப்படையச் செய்கின்றது. வேதாகமம் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது, மனித ஆர்வத்தைத் திருப்தி செய்வதென்பது அந்த நோக்கமல்ல. பரிசுத்த எழுத்தாளர்கள் சாதாரண எழுத்தாளர்களாய் இருந்திருந்தால் காயீனின் மனைவியை அடையாளப் படுத்துவது பற்றியும், மோசேயின் உடல் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தைப் பற்றியும், இயேசுவின் வாழ்க்கையில் ஒன்றுமே கூறப்படாமல் விடப்பட்ட 18 ஆண்டுகளைப் பற்றியும், இயேசுவின் தனிப்பட்ட தோற்றம் பற்றியும், யோவான் 8:6, 8ல் அவர் தரையில் எழுதியவைகள் பற்றியும், மரணமடைந்திருந்த லாசரு, கல்லறையில் நான்கு நாட்கள் பெற்ற அனு பவங்கள் பற்றியும் மற்றும் பவுல் பரதீசுக்குள் எடுத்துக் கொள்ளப்பட்ட பயணம் பற்றியும் விபரங்கள் கொடுத்திருப்பார்கள் என்பது நிச்சயம். இந்தப் பிற்கால நாளிலாவது இந்த நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் கிடைத்திருந்தால், அவைகள் பத்திரிகையின் தலைப்புச் செய்திகளாகி விடும்; பெரிய அளவில் விற்பனையாகும் புத்தகங்கள் வெளியிடப்படும். வேதாகம எழுத்தாளர்கள் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் (2 பேது. 1:3) என்ற உண்மையும் அவர்கள் மனித ஆர்வத்தைப் பூர்த்தி செய்யாதிருந்தார்கள் என்ற விஷயமும் வேதாகமத்தை ஒரு உயர்வான நிலையில் வைக்கின்றது.

## இதன் இலக்கியத்தின் உயர் பண்பு

வேதாகம எழுத்துக்களின் இலக்கியத்தினுடைய உயர் பண்பானது வேதாகமம் மனிதரைக் காட்டிலும் உயர்ந்த ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் இன்னொரு பண்பாகும். இதன் தெய்வீகத்தின் உரிமை கோருதல்களுடன், இலக்கியத் தொகுப்பாகக் கருதப்படுகையில் வேதாகமம் முதன்மை இடத்தைப் பெறுகின்றது. "பாபிலோன், அல்லது எகிப்து அல்லது வேறு எந்த இடங்களிலும் இருந்த இணையான தத்துவங்களைக் கொடுத்த கவிதையாளர்களைக் காட்டிலும் உயர்வான இடத்தை எபிரெயத் தீர்க்கதரிசிகள் தாங்கள் வார்த்தைகளைப் பயன்படுத்தியதில் வெளிப்படுத்திய அறிவுக் கூர்மைக்காகப் பெற்றார்கள்" என்று கல்வியாளர் ஒருவர் எழுதினார். யோபுவின் புத்தகமானது "தன்

*உறவுக் கலாச்சாரத்தில் இருந்த இணை மாதிரிகள் (புத்தகங்கள்) எல்லாவற்றிற்கும் மேலாக உயர எழுந்து நிற்கின்றது.”*

*புதிய ஏற்பாட்டைப் பொறுத்தமட்டில், லூக்கா மற்றும் பவுல் ஆகியோரைத் தவிர, (அதன்) எழுத்தாளர்கள் யாவரும் கல்வியறிவில்லாத மனிதர்களாகவே இருந்தார்கள் (அப். 4:13). அப்படிப்பட்ட மனிதர்கள் புத்தகங்களை எழுதியதே ஆச்சரியமான விஷயமாகும். தங்கள் வாழ்க்கை முழுவதிலும் மீன் பிடித்தல் என்ற தங்கள் பணியுடன் அடங்கிக் கிடந்த மீனவர்களில் ஒரு சிலர் மட்டும் மாபெரும் தவறுகள் இன்றி ஏதொன் றையும் எழுத முடிந்திருந்தது, ஆனால் வேதாகமத்தின் இந்த எழுத்தாளர்கள் தொடர்ந்து மதிப்பைப் பற்றிக் கொள்ளக் கூடிய சுய ஆணையையும், சுய ஒழுங்கையும் வெளிப்படுத்தினார்கள். இலக்கியத்தின் உயர் பண்பானது வேதாகமத்தின் தெய்வீகத்தன்மையை நிரூபிப்பதில்லை, ஆனாலும் இப்படிப்பட்ட ஒரு (உயர்) தரத்தை, பரலோகத்தில் தொடக்கம் பெற்ற ஒரு புத்தகத்தில்தான் ஒருவர் எதிர்பார்க்க முடியும்.*

## இதன் பூரணத்துவம்

*புதிய ஏற்பாடு, பூரணப் பிரமாணம் என்று உரிமைகோருகின்றது (யாக். 1:25), மற்றும் இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின்பும் கூட இந்த உரிமைகோருதலானது ஒளி மங்காது இருக்கின்றது. அதன் போதனையின்படி வாழ்பவர்கள் குறைவுபடுதல் எதையும் மற்றும் அதைக்காட்டிலும் மேம்படுத்தக் கூடியது எதையும் காண்பதில்லை.*

*மனிதனில் இருந்து தோற்றம் பெற்ற எதுவும் முன்னேற்றமடையச் செய்யக் கூடியதாகவே உள்ளது. McGuffey's Reader மற்றும் Ray's Blueback Speller போன்ற உன்னதமான அமெரிக்கப் பள்ளிப் புத்தகங்களில் கூட, முன்னேற்றங்கள் நீண்ட காலங்களுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டன, இந்தப் புத்தகங்கள் மாற்றப்பட்டு விட்டன. ஒரு தலைமுறைக்கு முந்திய இராசாயனப் புத்தகங்கள், அணு என்பது பிரிக்க முடியாதது என்று போதித்தன. மற்றும் மூலகங்களின் மாற்றுருவாக்கம் என்பது வேதியியலா ளர்களின் நிறைவேற முடியாத விருப்பமாகவே இருந்தது. இப்பொழுது அந்த இரசாயனப் புத்தகங்கள் யாவும் அருங்காட்சியகத்தின் பொருட்களாகி விட்டன.*

*தலைமுறைக்குப் பின் தலைமுறையாக, வேதாகமம் மாற்றமின்றி உள்ளது, அதை மாறுதலுக்குட்படுத்த வேண்டிய அவசியமும் இல்லாமல் போயிற்று. பலர், வேதாகமத்தைக் காட்டிலும் தாங்கள் அதிகமாய் அறிந்துள்ளதாகத் தவறான எண்ணம் கொள்கின்றார்கள், ஆனால் வேதாகமம் தவறற்ற வகையில் (ஏற்கனவே) நிறைவேற்றியிருப்பதை அவர்களின் புதிய உபதேசங்கள் ஒருபொழுதும் நிறைவேற்றுவதில்லை. வேதாகமம் மனிதனிடத்தில் மட்டுமிருந்து தோற்றம் பெற்றிருந்தால், ஒருபொழுதும் மாறுதல் தேவைப்படாத, ஒருபொழுதும் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கத் தேவைப்படாத எந்த ஒரு மனிதப் பணிக்கும் அது முதல் எடுத்துக்காட்டாகியிருக்கும்.*

*சபை உபதேசச் சட்டப் புத்தகங்கள், வேதாகமத்தின் அடிப் படையிலும், கல்வியாளர்களைக் கொண்டும் எழுதப்பட்டிருந்தாலும், மறுபடியும் மறுபடியும் அவைகளைத் திருத்தியமைப்பது அவசியமாகின்றது. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல் பெற்ற மனிதர்களால் அவை எழுதப்படாதபடியால் இது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். வேதாகமமானது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்திலும் திருத்தங்கள் எதுவும் தேவைப்படாது, புத்துணர்வையும் மரியாதையையும் தன்னகத்தே தக்க வைத்துக் கொள்கின்ற உண்மை என்பது தனிச் சிறப்பானதாகவும் விளக்கம் ஒன்று தேவைப்படுவதாகவும் உள்ளது.*

## *இதன் அழிக்கப்பட முடியாத பண்பு*

*கடைசியாக, மனித முயற்சிக்கு மேலான ஒன்று வேதாகமத்தைப் பாதுகாத்ததை வரலாறு சுட்டிக்காட்டுவதைக் கவனியுங்கள்: பல நூற்றாண்டுகளாக நாசமோசங்களும், அக்கினியால் பரிசோதிக்கப்படுதலும் இருந்த போதிலும் நிலைத்திருப்பதற்கான அதன் திகைப்பூட்டும் வல்லமையைக் கவனியுங்கள். புத்தகங்கள் துன்புறுத்தப்படாதவைகளாக இருந்த பொழுதும் கூட, அவைகளின் ஒரு சிறு சதவிகிதமே அவைகள் எழுதப்பட்ட தலைமுறையின் காலத்தில் பிழைத்திருக்கின்றன. வேதாகமமோ ஒவ்வொரு புதிய தலைமுறைக்கும் புத்துணர்வையும் பொருத்தமானவற்றையும் தனிச்சிறந்த வகையில் முன் வைக்கின்றது.*

*வேதாகமத்தை உண்டாக்கிய நாடு/இனம் மற்ற புத்தகங்களையும் உண்டாக்கியது, ஆனால் அந்த புத்தகங்கள் பிழைத்திருந்ததில்லை. பழைய ஏற்பாட்டில் அவைகளைப் பற்றிய குறிப்புகள் இருப்பதால் மட்டுமே அவைகளைப் பற்றிய அறிதல் நமக்குக் கிடைக்கின்றது (எண். 21:15; யோசு. 10:13). யூதர்களின் மறைவான/இரகசிய புத்தகங்கள் (இது பழைய புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது;* Apocryphal *என்றால்* hidden *அல்லது* Secret things *என்று அர்த்தமாகும்.) வேதாகம மார்க்கத்துடன் அவைகளுக்கு இருந்த உறவின் காரணத்தினாலேயே நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்படுதலைப் பராமரித்துக் கொண்டுள்ளன. பெயர் அறியப்படாத யாரோ ஒருவர் பின்வருமாறு எழுதினார்:*

> *இராயனின் வல்லரசு வலுவிழந்து ஒழிந்தது; ரோமாபுரியின் சேனைகள் யாவும் புழுதியில் சுழன்று எரிகின்றது; ஐரோப்பாவில் நெப்போலியன் சுழன்று ஏறிய பனிப் பாறைச் சரிவுகள் உருகிப் போய் விட்டன; பார்வோனின் இளவரசன் வீழ்ந்து போனான்; அவர்கள் தங்களின் கல்லறைகளாயிருக்கும்படி கட்டிய பிரமிடுகள் பாலைவன மணலில் அநுதினமும் அமிழ்ந்து கொண்டிருக்கின்றன; தீரு நகரானது மீனவர்களின் வலைகளை உலர்த்தும்/சுத்தம் செய்யும் பாறையாக உள்ளது; ... ஆனால் தேவனுடைய வசனம் இன்னமும் உயிர் வாழ்கின் றது. அதை இல்லாமல் செய்து விடுவதாகப் பயமுறுத்திய யாவும்*

அதற்கு உதவி மட்டுமே செய்திருக்கின்றன; மற்றும் அது மனிதர்கள் கட்டக் கூடிய மாண்பு மிக்க நினைவுச் சின்னம் எவ்வளவு நிலையில்லாதது என்பதையும் தேவன் பேசியுள்ள மிகச் சிறு வார்த்தை கூட எவ்வளவாய் நிலைத்திருக்கின்றது என்பதையும் ஒவ்வொரு நாளும் நிரூபிக்கின்றது.

நாடுகள்/இனங்கள் எழுகின்றன மற்றும் விழுகின்றன, ஆனால் வேதாகமம் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றது. நீரோ பவுலைக் கொலை செய்வதில் வெற்றியடைந்தார்; ஆனால் இன்றைய நாட்களில் நீரோவும் அவரது பேரரசும் மரணம் அடைந்தன(ர்). ரோமாபுரியில் பவுலின் சிறைச்சாலை (இன்று) இல்லாமல் ஒழிந்தது, ஆனால் பவுலின் சிறைநிருபங்கள் இன்றும் ஜீவனுள்ளவைகளாகவும் செயலாக்கம் மிக்கவைகளாகவும் இருக்கின்றன.

கி.பி. 303ல் பேரரசர் டயக்ளீஷியன், வேதவசனங்களின் பிரதிகள் எல்லாம் அழிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். தமது படை வீரர்களும் மற்றும் விசாரணையாளர்களும் வெற்றியடைந்தார்கள் என்று அவர் நினைத்தார்; தமது யூகமாயிருந்த சாதனையைக் கொண்டாடுவதற்காக அவர் ஒரு பதக்கத்தில் பின்வரும் வார்த்தைகளைச் செதுக்கினார்; "கிறிஸ்தவ மதம் அழிக்கப்பட்டது, தேவர்களின் ஆராதனை மீட்டமைக்கப்பட்டது." பிறகு, வேதாகமங்களை எரித்திருந்த ஓரிடத்தில் "அழிந்து போனவன் என்பதே கிறிஸ்தவர்களின் பெயர் ஆகும்" என்ற கல்வெட்டைக் கொண்ட நினைவுச் சின்னமொன்றை எழுப்பினார். அவருடைய (அழிக்கும்) முயற்சிகள் இவ்வளவாய் இருந்த போதிலும், வேதவசனங்களின் பிரதிகள் மறுபடியும் தோன்றி, பெருகின. இருபது வருடங்களுக்குப் பின், கான்ஸ்டன்டைன் என்ற இன்னொரு ரோமப் பேரரசர், தம் பேரரசில் இருந்த ஒவ்வொரு சபையிலும் வேதாகமத்தை வைக்கத் தொடங்கினார். வேதாகமமானது அழிக்கப்பட முடியாத பண்பை உரிமைகோருகின்றது (1 பேது. 1:23) மற்றும் வல்லமை மிக்க ரோமப் பேரரசின்மேல் அது பெற்ற இந்த வெற்றியானது அதன் உரிமைகோருதல் வீண் தற்புகழ்ச்சியல்ல என்பதைச் செயல் விளக்கப்படுத்துகின்றது.

வேதவசனங்களுக்கு எதிரான சரீரப் பிரகாரமான வன்முறைகளுடன், நிரந்தரமானதென்ற வேதாகம உரிமை கோருதல்களை (ஏசா. 40:8; மத். 24:35; மாற். 13:31; லூக். 21:33) சீர்குலைப்பதற்கு அவிசுவாசிகள் எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். 1778ல் மரித்த தற்பெருமை நிறைந்த வால்ட்டேர் என்பவர், (அவர் வாழ்ந்த காலத்தில்) வேதாகமத்திற்கு எதிரான அவருடைய தாக்குதல்களினால் ஒரு நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே அது ஒழிந்து போகும் என்று முன்னுரைத்தார். ''கிறிஸ்தவத்தைத் தொடங்குவதற்குப் பன்னிரெண்டு பேர் தேவைப்பட்டது. ஒரு மனிதன் அதை ஒழித்து விடுவான்'' என்று அவர் தற்புகழ்ச்சியோடு கூறிக் கொண்டார். இருப்பினும், அவர் மரணத்திற்குப் பின் மிக விரைவிலேயே இங்கிலாந்து மற்றும் அயல் நாட்டு வேதாகமச் சங்கமானது ஏற்படுத்தப் பட்டது; அது வால்ட்டேரின் எழுதும் அறையை வேதாகமங்களை வைக்கும்

*அறையாகப் பயன்படுத்தியது. வால்ட்டேரின் மத நம்பிக்கையற்ற இலக்கியங்களை அச்சிட்ட அதே அச்சகங்கள் வேதாகமத்தின் பிரதிகளை அச்சிடப் பயன்படுத்தப்பட்டன!*

*1809ல் மரித்த தாமஸ் பெய்னி என்பவர் (தாம் வாழ்ந்த காலத்தில்) எழுதிய Age of Reason என்ற புகழ் அற்ற புத்தகத்தின் மூலம் வேதாகமத்தைத் தாம் தாக்குவதில் பெருமை கொண்டார். அதில் அவர், "அடுத்த ஐம்பது ஆண்டுகளில் வேதாகமமானது வழக்கத்தில் இல்லாது அற்றுப் போய் மறக்கப்பட்டு விடும்" என்று பெருமையடித்துக் கொண்டார். மறுபடியுமாக அவருடைய அப்புத்தகத்தை அச்சிட்ட அதே அச்சகம் ஆயிரக்கணக்கில் வேதாகமங்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்டது.*

*வேதாகமத்தைப் போல வேறு எந்தப் புத்தகமும் இப்படிப்பட்ட அழிக்கும் முயற்சிகளைத் தாங்கி நிலை நின்றிருந்ததில்லை. "இன்னமும் அது வேதனைப் படுத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, திரித்துக் கூறப்பட்டு மற்றும் அது வாழ்ந்துள்ளதென்றால், நமது நவீன இலக்கிய விசாரணையாளர்கள் எவருக்கும் இராத பெருமதிப்புடன் அது என்றென்றும் இப்பொழுது போலவே வாழ்ந்திருக்கும்." மனிதரில் இருந்து மட்டுமே தோன்றிய எந்த ஒரு புத்தகமும் வேதவசனங்களுக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட ஒழுக்கங்கெட்ட தாக்குதல்களில் உயிர் பிழைத்திருக்க முடியாது.*

*கடந்து போன மாலையில் கருமானின் கதவை நான் கடந்து போனேன்,*
*காதில் அவனது பட்டறைக் கல்லின் சத்தம் மாலை மணியோசையாய் ஒலித்தது,*
*அப்புறம் நான் உள்ளே பார்த்தேன், அறையின் தரையிலே*
*பழைய சுத்தியல்கள், பல ஆண்டுகள் அடித்ததில் பாழாய்ப் போனவைகள்.*
*"பாடாவதியான இத்தனை சுத்தியல்களால் அடிபட்ட*
*பட்டறைக் கற்கள் எத்தனை நீ வைத்திருந்தாய்?" என்று கேட்டேன்.*
*"ஒன்றே ஒன்றுதான்" என்றான் அவன் சற்றே தன் கண்களைச் சிமிட்டி*
*"பட்டறைக்கல் சுத்தியல்களைப் பாழாக்குவதை அறி" என்றான்.*
*ஆகவே, தேவனுடைய வசனம் என்ற பட்டறைக் கல்லானது*
*பக்தியற்றவர்கள் ஆண்டாண்டு காலமாய் அடிமேல் அடித்தும் கூட*
*அவைகளின் சத்தம் அவனியெங்கும் கேட்கப்பட்டிருந்தும் கூட*
*பட்டறைக்கல் நிலைத்துள்ளது, சுத்தியல்களோ பாடாவதியானது*
*என்று எனக்குள் எண்ணமிட்டேன்.*

(John Clifford, "God's Word," in *Masterpieces of Religious Verse*)

## முடிவுரை

வேதாகமத்தின் போற்றத்தக்க பண்புகளில் இதன் ஒருமைப்பாடு, இதன் திறமை மிக்க எளிமை, இதன் பாரபட்சமற்ற தன்மை, இதன் செறிவுப் பண்பு, இதன் கட்டுப்படுத்தும் பண்பு, இதன் இலக்கியத்தின் உயர் பண்பு, இதன் பூரணத்துவம் மற்றும் இதன் அழிக்கப்பட முடியாத பண்பு ஆகியவை உள்ளன. முற்றிலும் மனிதரால் மட்டும் எழுதப்பட்ட சில புத்தகங்கள் இந்த எட்டு மேலான பண்புகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவைகளைப் பெற்றிருக்கின்றன, ஆனால் ஒரே ஒரு புத்தகம் மட்டுமே இந்த எட்டு பண்புகளையும் பெற்றுள்ளது. அந்த உண்மையானது, வேதாகமம் மனிதரல்லாத துவக்கத்தைக் கொண்டுள்ளது என்பதற்குத் தன்னிலே பலத்த ஆதாரமாக உள்ளது.

வேதாகமம் என்பது விசுவாசத்தின் புத்தகமாக, உபதேசத்தின் புத்தகமாக, ஒழுக்கங்களின் புத்தகமாக, மதத்தின் புத்தகமாக, தேவனிடத்திலிருந்து விசேஷமாய் வெளிப் படுத்தப்பட்டதாக உள்ளது.

தானியேல் வெப்ஸ்ட்டர்.